

**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
**Website: www.mntfreeias.com**

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள்

## தாள் - I

**கால அளவு: மூன்று மணி நேரம்**
**Duration : 3 Hours**

**மொத்த மதிப்பெண்: 100**
**Total Marks : 100**

**அலகு-1(அ)**

**குறிப்பு: i) கொடுக்கப்பட்ட தமிழ் பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

**(1 x 10 = 10)**

1. தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். நம் தாய்மொழியாம் தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின் முதன்மொழியும் ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ்மொழிக்கே உண்டு. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது, நம் தமிழ்ப்பண்பாடு. உலகமே வியந்து பார்க்கும் வளமான சொற்கள் உடையது நம் அன்னைத் தமிழ்மொழி.

**அலகு-1(ஆ)**

**குறிப்பு: ii) கொடுக்கப்பட்ட ஆங்கில பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் தமிழில் மொழி பெயர்க்கவும்.**

**(1 x 10 = 10)**

2. Telescope is an optical instrument to see the distant objects. The first telescope was invented by Johann Lippershey in 1608. Galileo made a telescope to observe distant stars. He got the idea, from a spectacle maker who one day observed that the distant weather cock appeared magnified through his lens system fitted in his shop. Galileo observed the satellites of Jupiter and the rings of Saturn through his telescope.

## அலகு-2

குறிப்பு: i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை

(1 x 10 = 10)

3. இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவை களுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக்கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள்சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.ருசிக்காக, சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும்தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருள் செரிமானமாதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும்.

உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும். நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் வைத்துக்கொளளவேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தினைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்கவேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும்இடம், பருவநிலை ஆகியவற்றின் அடிப்ப டையில் ஊட்டச்சத்துக்களின் தேவை மாறுபடும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிககாய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

## அலகு-3

குறிப்பு: i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடை அளிக்கவும்.
ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்.

(5 x 2 = 10)

4. கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு,பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின்முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர்.

கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் கட்டும் கலையை நன்கு அறிந்திருந்தனர். கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர்.

பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

1. கம்மியர் எனப்படுவர்கள் யாவர்?
2. கப்பல் சாத்திரம் என்னும் நூல் தெறிவிக்கும் செய்தி என்ன?
3. கப்பலின் உறுப்புக்கள் சிலவற்றைக் கூறுக.
4. கப்பல் கட்டும் கலையில் பரிபாடல் என்ற நூல் குறிப்பிடும் செய்தி என்ன?
5. சுக்கான் – குறிப்பு தருக.

### அலகு-4

குறிப்பு: i) கொடுக்கப்பட்ட சுருக்க குறிப்புகளைக் கொண்டு விரிவாக எழுதுக.
ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(1 x 10 = 10)

5. சங்க காலத்தில் குடும்ப அமைப்பபை இலக்கியம் வாயிலாக அறிதல் – தமிழர் விருந்தோம்பல் பண்பு – சங்க இலக்கியத்தில் தமிழர் திருமண முறை மற்றும் மதச்சார்பின்மை – சங்க கால வணிகம்; வணிகம் குறித்து இலக்கியம் சொல்லும் செய்திகள் – தமிழ் இலக்கியங்களில் அறிவியல் செய்திகள்.

### அலகு-5

குறிப்பு: i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைக.
ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.
iii) கொடுக்கப்பட்ட வினாவிற்கு 300 சொற்களுக்கு மிகாமல் விடை அளிக்கவும்.

(1 x 15 = 15)

6. (அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.
(ஆ) ஓர் அரசன் அல்லது அரசின் பொறுப்புகள் என்னென்ன என்பதை திருக்குறள் வழிநின்று பட்டியலிடுக.
(இ) அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே – என்பதை திருவள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?
(ஈ) மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும் – என வள்ளுவர் கூற காரணம் என்ன? மேலும் அவ்வரிசையில் வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?
(உ) திருவள்ளுவர் கூறும் இடனறிதல் – கட்டுரை வரைக.

### அலகு-6

குறிப்பு: i) கட்டுரை வரைதல்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.
iii) 250 சொற்களுக்கு மிகாமல் விடை அளிக்கவும்.

(1 x 15 = 15)

7. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
ஆ) தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உமது பகுதியில் அமைந்துள்ள பொது நூலகங்களின் தகவல்களை பெறுவதற்கான விண்ணப்பம் ஒன்றினை தயார்செய்க.

இ) இல்லம் தேடி கல்வி திட்டத்தில் பயன்பெற்றுவரும் மாணவர்களின் விவரங்களை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சேகரித்துத் தலைமை செயலருக்கு அனுப்பக் கோரும் அலுவலக ஆணைக் கடிதம் வரைக.

## அலகு-7

குறிப்பு: i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் உள்ளன.
ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
iii) ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு மதிப்பெண்.
iv) ஐந்து பிரிவுக்கும் சேர்த்து இருப்பது மதிப்பெண்.

(4x5=20)

8. பிழை நீக்கி எழுதுக:
   1. கண்ணுக்குக் அழகுப் பிறருக்கு இரக்கம் காட்டல்
   2. கள்வி நிளையங்கள் காலந்தோறும் மாரி வருகின்றன.
   3. “கர்ரது கைம்மன் அலவு, கள்ளாதது உலகலவு”
   4. புத்தகம் படிக்கும் பலக்கத்தை ஏற்படுத்திக் கொல்வேன்.
9. எதிர்மறை வாக்கியமாக மாற்றுக:
   1. நாற்றிசையும் செல்லாத நாடில்லை
   2. நல்ல நண்பர்கள் சேருவர்
   3. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
   4. அறம் வளரும்
10. பிரித்து எழுதுக:
   1. அவ்வுருவம்
   2. ஒப்பெழுத்து
   3. தடக்கை
   4. கைதொழுது
11. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.
   1. ஏற்ற இறக்கம்
   2. மேதை பேதை
   3. இயற்கை – செயற்கை
   4. ஊரும் பேரும்
12. கீழ்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
   1. வான்புகழ்
   2. கொள் – கோள்
   3. நம்பிக்கை
   4. ஆய்வு